முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 20—3—59 | வெள்ளி | ஒலி: 43

திருவாளர் தேசீயம் பிள்ளை!

உ

தேசீயம்பிள்ளை: உங்கள் நாட்டு அழுகும் பொருள்களான பிணங்களுக்கு வரி போடுகிறேன் என்கிறீர்களே; அதனுல் எதிர்ப்பு ஒன்றும் ஏற்படாதே?

எமன்: எதிர்ப்பா? வரி போட்டால் எதிர்ப்புகூட ஏற்படுமா? எமதர்மன் ராஜ்யத்தில் எதிர்ப்பவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?

தேசீயம்: என்ன தண்டனை?

எமன்: உடனடியாக அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அதோடு முடியாது தண்டனை! பூலோகத்தில் மீண்டும் பிறந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல; அவர்கள் தேர்தலில் அபேட்சகர்களாக நின்று பணம் கொடுத்து ஓட்டு வாங்கித் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டாக வேண்டும்!

தேசீயம்: சரி; எங்கள் நாட்டில் போட்டியில்லாமல் சில பேர் தேர்ந்தெடுக்கப்படுகிருர்களே; அவர்கள் எல்லாம் தங்களின் தண்டனை பெருதவர்களா?

எமன்: அவர்கள் கட்டவேண்டிய காணிக்கையை இங்கேயே கட்டிவிட்டார்கள்!

தேசீயம்: தாங்கள் குறிப்பிடும் அபேட்சகர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களா? அல்லது வேறு கட்சியா? அல்லது சுயேச்சையா?

எமன்: **சுயேச்சைகளைப் பற்றி ஏனய்யா இங்கு பேசுகிறீர்? அந்த சுயேச்சைகளுக்குத்தான் சூடு, சொரணை, நன்றி, விசுவாசம் — எதுவுமே கிடையாதே!**

தேசீயம்: **அய்யய்யோ... எல்லா சுயேச்சைகளுமா அப்படி? இல்லை! இல்லை! ஏதோ...ஒன்றிரண்டு ....கும்பகோணம் போலிருந்தால்..**

மு. கருணாநிதி

எமன்: போகட்டும்—பிண வரிக்குப் பிறகு எந்த வரி போடலாம்? அந்த யோசனையையும் சொல்லும்!

தேசீயம்: எங்கள் தேசத்தில் போடாமல் இருக்கிற வரிகளை மட்டுமே விரல் விட்டுச் சொல்ல முடியும். போட்டிருக்கிற வரிகளின் பட்டியலை ஞாபகப்படுத்திக் கூறுவது மிகவும் சிரமம்!

எமன்: அப்படி வரி போடப்படாத பொருள்கள் என்னென்ன?

தேசீயம்: அத்திப்பூ! குதிரைக் கொம்பு! சேவல் முட்டை! இத்யாதி பொருள்களுக்கு எங்கள் நாட்டில் வரிவிலக்கு செய்யப்பட்டிருக்கிறது.

எமன்: சபாஷ்! அவைகளுக்கும் சேர்த்து நான் இங்கே வரி போட்டுவிடுகிறேன். தேசியம்பிள்ளை! மிகவும் நன்றி! இன்றைய நமது பேட்டி எமலோகத்தின் முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்பட்டதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். ஒன்று கேட்க மறந்துவிட்டேனே; உங்கள் ராஜ்யத்தில் "ஐந்தாண்டுத் திட்டம்" என்று ஒரு பெரிய மந்திரவாதி இருக்கிருராமே; அவர் மிகவும் கெட்டிக்காரர்தானு? அவரை இங்கு அழைத்து வரலாமென்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் உலவுகிறது—அழைத்து வரத் தகுதி உடையவர்தானு?

தேசீயம்: அவர் இன்னும் இங்கு வரவில்லையா? எனக்கு முன்பே இங்கு வந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன்...!

எமன்: இல்லை! இல்லை!! உம்மைக் கேட்டுக்கொண்டு

[தொடர்ச்சி பக்கம்—4]



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

29. இந்துமதத்தின் பொற்காலம்

அன்புள்ள மாதவி,

ஐரோப்பாவில் ஷார்லமேனும், மத்ய கிழக்கில் ஹரூன்—உல்—ரஷீதும் பேரரசுகளை நிறுவி ஆண்டபோது, வட இந்தியாவில் வலிமைமிக்க அரசு நிறுவி ஆண்டவன் ஹர்ஷ வர்த்தனன். அவனைப் பற்றிக் கூறுமுன், கி. பி. நான்காம் நூற்றுண்டிலிருந்து ஆரும் நூற்றுண்டுவரை வட நாட்டில் ஆர்ய தர்மக் கொடி கட்டி ஆண்ட குப்த வம்சத்தைப் பற்றி நீ அறிந்து கொள்ளுவது அவசியம். குப்தர்களின் காலம் இந்து மதத்தின் பொற்காலம்; வடமொழியும் ஆரியக் கலாச்சாரமும் வலிமையின் சிகரத்தை எட்டிப் பிடித்திருந்த காலம். புத்த மதத்தின் தோற்றத்துக்குப் பின் இந்துமதம் மீண்டும் தலை தூக்கியது இந்தக் காலத்தில் தான்!

குஷானர்கள் இந்தியாவை ஆக்ரமித்துக் கொண்டதைப் பற்றி முன்னரே உனக்குக் கூறியிருக்கிறேன். வட இந்தியாவில் குஷானர்களின் ஆதிக்கத்தை இந்துக்கள் முழு மூச்சோடு வெறுத்தனர். குஷானர்கள் எவ்வளவோ முயன்றும் — வகை வகையான ராஜ தந்திரங்களைக் கையாண்டும்—அவர்கள் இந்துக்களால் அந்நியர்களாகவே கருதப்பட்டனர். இந்து க்ஷத்திரியர்கள் குஷானர்களின் ஆதிக்கத்தை வேரறுக்கக் காலம் கருதிக் காத்திருந்தனர். ஆரிய வர்த்தத்தைக் குஷான் மன்னர்களிடமிருந்து மீட்க, 'புனிதமான போர்' (Holy War) தொடங்க இவர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். அதற்கான நல்வாய்ப்பு கி. பி. 308-ல் அவர்களுக்குக் கிடைத்தது. பாடலிபுத்ரத்தை ஆண்டுவந்த இந்து அரசன் சந்திரகுப்தன் க்ஷத்திரியர்களின் லட்சியத்தை நிறைவேற்றும் தளபதியானன்!

இந்த சந்திரகுப்தனுக்கும் மௌரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சந்திரகுப்தனுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை! காலத்தாலும் வம்சத்தாலும் இருவரும் மிகவும் வேறுபட்டவர்கள். சந்திரகுப்த மௌரியன் கி. மு. வில் வாழ்ந்தவன் என்பதை நினைவு படுத்திக்கொள். நான் இப்பொழுது குறிப்பிடும் சந்திரகுப்தன், குப்த சாம்ராஜ்யத்தை நிறுவியவன்; கி.பி. யில் வாழ்ந்தவன்!

சந்திரகுப்தன் பாடலிபுத்திரத்தில் சிற்றரசனுக ஆட்சி செய்தான். ஆரிய தர்மத்தைக் காக்க வேண்டுமென்ற ஆசை இவனுடைய உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஆகவே ஆரிய வர்த்தத்தில் வாழ்ந்த இந்துக்களை ஒரே தலைமையில் ஒன்று படுத்தப் பெரு முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டான். லச்சவி குலத்து இளவரசியான குமாரதேவியைத் திருமணம் செய்து கொண்டு, அந்த இனத்தின் தோழமையையும் பெற்றுன். இவ்வாறு தன்னைப் பலப்படுத்திக் கொண்ட பின், ஆரிய வர்த்தத்தை அந்நியர்களான குஷானர்களிடமிருந்து மீட்கப் பெரும் போரொன்று துவக்கினன். ஆரிய தர்மச் செல்வர்களும் இந்துப் புரோகிதர்களும் சந்திரகுப்தனின் பணிக்கு நல்லாசி கூறித் துணை நின்றனர். பன்னிரண்டு ஆண்டுகள் சந்திரகுப்தன் போரில் ஈடுபட்டு, வட இந்தியாவில் மகத்தானதொரு இந்து சாம்ராஜ்யத்தை நிறுவினன்.

அவனது ஆட்சியில் இப்பொழுது உத்தரப் பிரதேசம் (நேருவின் மாநிலம்) என அழைக்கப்படும் மாநிலமும் சேர்ந்திருந்தது. பல மன்னர்களை வென்றதற்கு அடையாளமாகப் பேரரசன்—சக்ரவர்த்தி—என முடி சூட்டிக் கொண்டான். இதிலிருந்து ஆரம்பித்த குப்த வம்சம், சுமார் இருநூறு ஆண்டுகள் ஆட்சி செய்து, வரலாற்றில் — எல்லாத் துறைகளிலும்—ஒரு பொற் காலத்தை சிருஷ்டி செய்தது.

இந்த இரண்டு நூற்றுண்டுக் காலத்திலும் இந்துமத உணர்ச்சியும், இந்து தேசிய உணர்ச்சியும் (Hindu Nationalism) பயங்கரமான அளவில் விஸ்வரூபம் எடுத்து, எதிர்ப்பட்டதையெல்லாம் ஜீரணித்துத் தன்மயமாக்கின! இந்திய மண்ணில் குடியேறிய இந்து அல்லாத அன்னியர் அனைவரும் பூண்டோடு களையப்பட்டனர். ஆரியரல்லாதார் மிலேச்சர்கள்—கீழ் மக்கள்—என அழைக்கப்பட்டனர்! தாங்கள் வென்ற ஆரிய மன்னர்களை மரியாதையாகவும், ஆரியரல்லாத மன்னர்களைக் கொடுமையாகவும் குப்தர்கள் நடத்தினர்கள் என்று பண்டித நேரு அவருடைய உலக வரலாற்றில் குறிப்பிடுகிருர்.

சந்திரகுப்தனுக்குப் பின் அவனுடைய மகன் சமுத்திரகுப்தன் பட்டத்துக்கு வந்தான். தந்தையைவிட எல்லா விஷயங்களிலும் இவன் தீவிரமானவனுக இருந்தான். இவன் சிறந்தபோர்வீரன்; இவனை இந்திய நெப்போலியன் என்று சில சரித்திர ஆசிரியர்கள் அழைக்கிருர்கள். இது அர்த்தமற்ற கூற்று என்பது என்னுடைய அபிப்பிராயம். காலத்தால் முந்திய ஒரு மன்னனை, காலத்தால் பிந்திய மன்னன் ஒருவனேடு ஒப்பிட்டு, பிந்திய மன்னனின்பெயரை அடைமொழியாக்கி முந்திய மன்னனை அழைப்பது காலவழு (Anachronism) ஆகும்! காளிதாசனை இந்திய ஷேக்ஸ்பியர் என்று சொல்லுவதில் பொருளில்லை; ஷேக்ஸ்பியரை வேண்டுமானுல் விருப்பமுடையோர் ஆங்கில நாட்டுக் காளிதாசன் என அழைக்கலாம்! இது ஒருபுறம் இருக்கட்டும்.

சமுத்திர குப்தன் தன் ஆட்சிக் காலத்தில் பாடலிபுத்திரத்திலிருந்து தலைநகரை அயோத்திக்கு மாற்றிக்கொண்டான். ராமாயணத்தின்மீது அவனுக்கிருந்த பற்று அவனை அப்படிச் செய்யத் தூண்டியிருக்கலாம். அவனுடைய சாம்ராஜ்யம் தெற்கேயும் ஓரளவுக்குப் பரவியிருந்தது. ஆனுல் தென்னகத்தில் அவனுடைய ஆட்சி, முறையாக நிலவியிருந்ததற்கு வரலாற்றில் ஆதாரமில்லை.

அவனுக்குப்பின் அவனுடைய மைந்தன் சந்திரகுப்தன் முடிசூட்டிக் கொண்டான். இவன் இரண்டாம் சந்திரகுப்தன் என வரலாற்றில் அழைக்கப்படுகிருன். இவனுக்கு விக்கிரமாதித்யன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. சீசர் என்ற பெயர் ரோமை ஆண்ட மன்னர்களுக்குப் பிற்காலத்தில் பட்டப் பெயராக மாறியதைப்போல பிற்கால குப்த மன்னர்களில் சிலர் விக்கிரமாதித்யன் என்ற பெயரைப் பட்டப் பெயராக சூடிக் கொண்டனர்.

விக்கிரமாதித்யன் தன் காலத்தில் குப்த சாம்ராஜ்யத்தில் இதுவரை சேர்ந்திராத கூர்ஜரம், கத்தியவார் முதலிய பிரதேசங்களைச் சேர்த்துக் கொண்டான் அவன் நிறுத்திய வெற்றித் தூண் இப்பொழுதும் டெல்லியில் காட்சியளிக்கிறது. அதன் உச்சியில் தாமரை மலர்வது போல் செய்யப்பட்டிருக்கும் வேலைப்பாடு, சிற்பக் கலையின் நுணுக்கத்துடன் திகழ்கிறது.

விக்கிரமாதித்யனின் ஆட்சிக் காலத்தில் கலையும் காவியமும், விஞ்ஞானமும் மொழியாராய்ச்சியும், இதர பிற துறைகளும் உன்னத நிலையில் இருந்தன. அவனுடைய அவையில் நவமணிகள் என அழைக்கப்பட்ட ஒன்பது மேதைகள் இருந்து சிறப்புச் செய்தனர். காளிதாசன் ஒப்பற்ற நாடகக் காவியங்கள் புனைந்து, இலக்கியத்துக்கு மெருகேற்றிக் கொண்டிருந்தான். கடகத்பரியின் கற்பனை நாடக இலக்கியமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. தன்வந்திரி ஈடு இணையற்ற மருத்துவ நிபுணனுக விளங்கினன். ஆரிய பட்டரின் கணிதத் திறமை கலிலியோ காணவிருந்த உண்மைகளுக்குக் கட்டியங் கூறிக் கொண்டிருந்தது. வராகமிகிரர் வானுராய்ச்சித் துறையில் புதுப் புது உண்மைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார். சம்பூ ஒப்பற்ற இலக்கண ஆசிரியராகத் திகழ்ந்தார். வேதாளபட்டர் பன்மொழிப் பயிற்சியுடைய பெரும் புலவராக இலங்கினர். கவிஞன் வரருசி பாமாலை புனைந்து கற்றோரையும் மற்றோரையும் களிகூரச் செய்தான். அமரசிம்மர் அகராதி புனையும் பணியில் ஈடுபட்டிருந்தார். குப்தர்களின் பொற்காலத்தை விளக்க வேறென்ன சான்று வேண்டும்?

குப்தர்களின் காலத்தில் பௌத்த மதம் செல்வாக்கிழந்தது. பௌத்தம் வளர்த்த ஜனநாயக உணர்ச்சியும், அறிவியல் நெறியும் இந்து தர்மத்துக்கு உடன்பாடாக இல்லை. ஆனுலும் குப்தர்கள் பௌத்தர்களைக் கொடுமைப்படுத்தியதாகத் தெரியவில்லை. சிலோன் மன்னனும் பௌத்த மதத்தவனுமான மேகவர்ணன், சிங்கள மாணவர்கள் தங்கி வசிக்க கயாவில் பௌத்த மடம் கட்டியதாக வரலாறு கூறுவதிலிருந்து இந்த உண்மையை உணரலாம். சமுத்திரகுப்தனுக்கு அவன் விலையுயர்ந்த பரிசுகளும் அனுப்பியிருக்கிருன்.

ஏறத்தாழ சமுத்திரகுப்தனின் ஆட்சிக் காலத்தில் ஃபாஹியான் என்ற சீன யாத்ரீகன் இந்தியாவுக்கு வந்தான். பௌத்த தர்மம் பற்றிப் போதிக்கும் புனித நூல்களைச் சேகரித்துப் போகவே அவன் இந்தியாவுக்கு வந்தான். அவன் எழுதி வைத்த குறிப்புகள் மகத சாம்ராஜ்ய மக்கள் வாழ்ந்த முறையை நாம் அறியத் துணை செய்கின்றன. மக்கள் மகிழ்ச்சி நிரம்பிய வளமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். எந்த குற்றத்துக்கும் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. நீதி மிகவும் அமைதியாக அமுல் செய்யப்பட்டது. புத்தர் பிறந்த கபில்வாஸ்து காடாக இருந்ததாக ஃபாஹியானின் குறிப்புகள் கூறுகின்றன. சாலைகளெங்கும் ஆங்காங்கே பிரயாணிகளுக்கு இலவசமாக உணவளிக்கும்

[தொடர்ச்சி பக்கம்—7]

முதன்முறை தேர்தலுக்கு நின்றுர்; படுதோல்வி அடைந்தார்! ஆனுல் அவர்தான் இப்போது உலகப் பேரரசு ஒன்றின் தலைவர்!

யார் அவர்?

முத்தாரம்

இதழ் 25-ல்

'உலகப் பெருந் தலைகள்'

வரிசையில் விடை காணுங்கள்!

ஏப்ரல் முதல் வாரம் கிடைக்கும்!

வெள்ளி 20—3—59 சென்னை

பாலம் போடமுடியாது!

நாக்கைக் கொள்ளிக்கட்டையாக மாற்றிக்கொண்ட நாச காலர்கள்—வாக்கிலே நஞ்சு குழைத்து, பேச்சிலே வஞ்சகத்தைக் கொட்டுகின்ற குணக்கேடர்கள்—சரித்திரச் சுவடியிலே அபாயச் சின்னங்களாக—அவமான முத்திரைகளாகத்தான் பொறிக்கப்பட்டிருக்கிறார்கள்!

தான் பிறந்த இடம் இந்த மண்தான்; வளர்ந்த பண்பும் மற்றவர் போல்தான்; நாம் வாழும் முறையும் மனிதப் பிறவியாகத்தான்-என்பதை எல்லாம் மறக்கச் செய்கின்ற மரத்துப்போன இருதயம் அவர்கள் உடலில் எப்படித்தான் குடியேறுகிறது?

கால வெள்ளத்திலே கரைந்து மறைந்து அழிந்துவிடும் அதிகார பலம்தான் காரணம்! அடிமை மனப்பான்மையினரை—அக்கிரமக்காரனையும் 'ஆரத்தி' எடுத்து வரவேற்கும் அடிவருடிகளை சில காலம் வாழ வைக்கும் இந்தத் துணைதான் எதிரிலிருப்போரை ஏமாளிகளாய்—ஏனென்று கேட்கும் திராணியற்றவர்களாய் மதிக்கச் செய்கிறது; பேசச் செய்கிறது!

தமிழகத்தைப் பொறுத்த வரையில் தடித்த நாக்குக்காரர்கள் தொடுத்த பாணம், தங்களையே திருப்பித் தாக்கிய கதையையும், குறுகிய காலத்திலேயே நல்ல படிப்பினை பெற்ற வரலாற்றையும் எவருமே மறந்திருக்க முடியாது!

"கழகத்தின் கணக்கை முடிப்பேன்" என்று கர்சித்தார், கம்பீரமற்ற உருவமும், காகபட்டரின் உள்ளமும் கொண்ட ஆச்சாரியார், ஒரு காலத்தில்! என்ன ஆயிற்று? யாருடைய கணக்குத் தீர்ந்தது என்பதை இன்று புளுகுக் கணக்கு எழுதுவோரின் கவனத்திற்கு அனுப்புகிறோம்!

"என் முதல் எதிரி முன்னேற்றக் கழகமே!" என்று விரல் நீட்டிக் காட்டியவர், இன்று விலையற்ற பண்டமாய் முடங்கிக் கிடக்கிறார்!

மொழிப் போரிலே இரு உயிர்கள்; மும்முனைப் போரிலே ஆறு உயிர்கள்—இப்படி பிணக் கறி தின்றவர்தான் பல்லக்கிலேயிருந்து தள்ளப்பட்டார், ஒருநாள்!

இந்த சர்வாதிகாரச் சிந்தின் இறுதி வரிகளைத்தான் இப்போது நம்மை யாளும் கனம் காமராசரின் பார்வைக்கு வைக்கிறோம்!

நாட்டில் உண்மையான கட்சி எது; போலிக் கட்சி எது—என்ற தன் தகுதிக்குப் பொருத்தமற்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார், அவர்! அதன் எல்லையிலேதான் 'வடக்கு, தெற்கு பிரிவினை பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிச்சைக்காரர்கள்'—என்று வசை பாடியிருக்கிறார்!

"பிச்சைக்காரன் பாடுவான்; மக்கள் ரசிப்பார்கள்; கூட்டம் கூடும்; சிலர் காலணா, அரையணாக்கள் வீசுவார்கள்; ஆனால் பிச்சைக்காரன் சொல்வதை எல்லாம் மக்கள் கேட்கமாட்டார்கள்!"

—குடந்தையிலே குறுமதிக்கு விளம்பரம் தேடும் இந்தக் கருத்தைத் தந்திருக்கிறார், அவர்!

திராவிட முன்னேற்றக் கழகம் பிச்சைக்காரனைப்போல—என்கிறார் அமைச்சர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றுமே தங்களைப் பிரபுக்கள் என்று அழைத்துக் கொண்டதும் கிடையாது; பிரபுக்களை அண்டி விட்டதும் கிடையாது!

இரும்புப் பெட்டிக்கும் இருதயத்திற்கும் சம்மந்தமில்லை; ஆகவே இல்லாதவர்களுக்கும், பொல்லாதவர்களின் சூழ்ச்சிக் கயிற்றால் சுழன்றுவரும் பம்பரங்களாம் பாட்டாளிகளுக்கும்தான் அதிலே இடம் உண்டு!

ஆனால், மிட்டா மிராசுகளின் கர்ப்பத்திலே பிறந்தது காங்கிரஸ்! வணிக முதலைகள் அளித்த பாலை உண்டு வளர்ந்து—வட்டி வேந்தர்களின் சட்டைப் பையில் தவழ்ந்து — பிணக் குவியலின்மேல் எழுப்பிய பண மாளிகையிலே வசிக்கின்ற அந்தக் காங்கிரசின் காவலாளிகளில் ஒருவராம் காமராசருக்கு கண்களில் சதையேதும் வளர்ந்து விடவில்லை; அதிகாரம் என்ற வாடைக் காற்றுதான் விழிகளில் மண்ணை வாரி அப்பிவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தை பிச்சைக்காரனுக்கு ஒப்பிடுகிறார். அதை நாமும் உவமைக்கு எடுத்துக் கொண்டால், நடந்து வருகின்ற நகரசபைத் தேர்தல்களின் முடிவு—ஆம்பூர், கோவை, சேலம் போன்ற இடங்களிலே காங்கிரசின் தோல்விக்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்திருக்கும் வெற்றி — தோல்வியடைந்த இடங்களிலேயும் பெற்றிருக்கும் பெருவாரியான வாக்குகள்—மக்கள் மன்றம் அந்த பிச்சைக்காரப் பாடகனுக்கு அளித்த 'பிச்சை'தான் அது!

ஆனால், அதே நேரம் கனம் காமராசருடைய அமைச்சரவையின் பிச்சைக்காரக் கோலத்தையும் நாடு பார்க்காமலில்லை! டெல்லி பிரபுவின் செங்கோட்டை எனும் மாளிகை வாசலில் மடிப் பிச்சை ஏந்தி நிற்கும் அந்தப் பிச்சைக்காரனுக்குக் கிடைப்பதென்ன?

காலணா; அரையணாக்களா? அல்ல; அல்ல! முகத்துக்குக் கரி முக்காட்டுக்குத் துணி!

அப்படி கரிபூசிய நிகழ்ச்சி ஒன்று இப்போது நடந்திருக்கிறது. தமிழகத்தின் தென் கோடியிலே பாம்பனுக்கும், இராமேசுவரத்திற்கும் இடையே பாலம் அமைக்கும் திட்டத்தை இப்போதைக்குக் கைகழுவி விட்டார்கள், கங்கைச் சமவெளிக்காரர்கள்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம் பெற்றது; நெடுஞ்சாலை விரிவு செய்யும் திட்டத்திலும் சேர்க்கப்பட்டது! ஆனால் இப்போதோ 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கட்ட முடியாது' என்ற பதிலை அனுப்பியிருக்கிறது டெல்லி!

'பாம்பன் பாலம்' மிகச் சிறிய திட்டம்—ஆனால் அந்தப் பகுதியினருக்கு அதிகப் பலன் தரக்கூடிய ஒன்று!

இத்தனைக்கும் அதற்குத் தேவையான தொகை எவ்வளவு தெரியுமா?

211 கோடி ரூபாய் செலவில் எழும்பும் ரூர்கேலா—

175 கோடியை விழுங்க இருக்கும் பிலாய்—

172 கோடியைச் சொந்தமாக்கும் துர்காபூர்—

—இப்படி வடக்கே கோடிக் கணக்கிலே குவிகின்றனவே உருக்கு ஆலைகளுக்கென திட்டங்கள்— அப்படிப் பெரும் தொகை எதையும் கேட்கவில்லை பாம்பன் பாலம்!

ஒரே ஒரு கோடி ரூபாய்தான்!

—இந்தச் சிறு தொகைதான் அதற்குத் தேவை!

வட நாட்டிலே திட்டங்களுக்கென்று கொட்டிக் குவிக்கப்படுகின்ற தொகையிலே கண்ணுக்குத் தெரியாத சிறு துளி—தேவையில்லாது வாழுகின்ற கவர்னர்களில் பத்து பேரின் ஒரு வருடச் சம்பளம்—'பாம்பன் பாலம்' கட்டி முடிக்கப் போதுமானது!

ஆனால் அதைத்தான் மறுத்துவிட்டது டெல்லிப் பேரரசு—வருந்தி வருந்திக் கேட்ட தமிழக அரசின் கோரிக்கையை கங்கை நதியிலே கரைத்துவிட்டது!

பாம்பன் கால்வாயிலே பாலம் போட வக்கில்லை; வடக்கிற்கும் தெற்கிற்கும் பாலம் அமைக்க முயல்கின்ற காமராசர், அது நடவாத செயல் என்று எடுத்துரைக்கும் நம்மை நோக்கி சந்துமுனைச் சிந்து பாடும் பிச்சைக்காரர்கள் என்கிறார்!

இந்த நாடு நல்ல 'திரு'வோடு வாழவேண்டும் என்பதற்காக, திருவோடு தூக்கித் தெருவோடு அலைகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்!

ஆனால் காளையோடு புறப்பட்ட குடுகுடுப்பைக்காரனும் காங்கிரஸ் ஆட்சி வடக்கேயிருந்து வெறுங் கையோடு அனுப்பப்படுகிறது அன்றும் இன்றும். ஏமாற்றம்! ஏமாற்றம்!! ஃ

தேசியம் பிள்ளை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தான் அழைத்து வரலாமென்று எண்ணம்.

தேசியம் : பெரிய மந்திரவாதி தான்! பெயரைக் கேட்கத்தான் பயமாயிருக்குமேதவிர ஆளைப் பார்த்தோமானால் தேவாங்கு மாதிரி இளைத்துப் போயிருப்பார்! அவருக்கு யானைப்பசி வியாதி வேறு! ஆயிரக் கணக்கில்—நூற்றுக் கணக்கில் எதையும் சாப்பிடுவது இல்லை. எல்லாம் கோடிக் கணக்கில் தான் வயிற்றில் போட்டு அடைப்பார். அவர் எங்கள் ராஜ்யத்தில் ஆஸ்தான மந்திரவாதியாக இருப்பதால் ஊழல் என்னும் தொத்து வியாதி எங்கும் பரவுகிறதே தவிர; பயன் ஒன்றும் கிடையாது. தயவு செய்து அவரை இங்கு அழைத்துக் கொள்ளுமாறு நான் பலத்த சிபாரிசு செய்கிறேன்.

எமன் : ஊழல் வியாதிக்காரரா? அடேடே இதுவரையில் தெரியாமல் போனதே! வரியினால் ஜன நெருக்கடியைக் குறைப்பதைக் காட்டிலும் ஊழல் வியாதியினால் கணிசமான அளவுக்கு ஜன நெருக்கடியைக் குறைக்கலாமே!..........பலே! பலே! நாளைக்கே நான் அவருக்கு அழைப்பு அனுப்புகிறேன்.

தேசியம் : அனுப்புங்கள்! ஒருவர் வந்தாலும் மற்றபடி ஊரைப் பார்த்துக்கொள்ள அவர் குடும்பத்தில் வரிசையாக குழந்தைகள் இருக்கிறார்கள். இரண்டாவது, மூன்றாவது என்று ஐந்தாண்டு திட்டக் குட்டி மாயாவிகள் ஏராளமாக இருக்கிறார்கள்!

எமன் : இன்றைய நமதுபேட்டி இனிது முடியட்டும்—உமக்கு ஏதாவது தேவைகளிருந்தால் தெரிவிக்கலாம்.

தேசியம் : தேவை யொன்றும் பிரமாதமில்லை. என்னை இந்த உல்லாச மண்டபத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அடுத்தபடியாக நான் மகாத்மா காந்தியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தர வேண்டும்!

எமன் : அவசியம் காந்தியைப் பார்த்தாக வேண்டுமா?... அவர் சொர்க்கமெனும் பாதாளச் சிறையில் அல்லவா கிடக்கிறார்? அந்த மூன்றாம் வகுப்புக் கைதியை நரகலோகத்து முதல் வகுப்புக் கைதியாகிய நீர் சந்திப்பது இயலாத காரியமாயிற்றே!

தேசியம் : எப்படியோ கிருபை செய்ய வேண்டும் — காந்தி மகானை நான் பார்த்தால் தான் ஆவல் தீரும்!

எமன் : சரி; ஏற்பாடு செய்கிறேன் — புறப்படும் என்னோடு!

தேசியம் : அவருக்கு அணிவிப்பதற்கு ஒரு மாலை......

எமன் : மாலைதானே......வாங்கிக் கொள்ளலாம்......

இருவரும் எழுந்து காந்தியைக் காணப் பயணப் படுகிறார்கள். போகும் வழியில் பூக்கடைகள் ஏராளமாக இருக்கின்றன. அழகான மாலைகள் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. எந்தக் கடையிலும் வியாபாரம் செய்கிற ஆளைக் காணவில்லை. தேசியம் பிள்ளை எமனிடம் கேட்கிறார்; "என்ன ஆச்சரியம்? ஆளில்லாத கடைகள்!" என்று!

"ஆட்கள் ஆவியுருவத்திலேயிருக்கிறார்கள். உமது கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள். பூவின்மீது வரி போட்டு உங்கள் ராஜ்யத்தில் உள்ள மந்திரிகள் இவர்களது சதை, எலும்புகளை யெல்லாம் கரைத்து உருக்கிவிட்டார்களாம். அதனால்தான் ஆவிகள், பூக்கடைகளோடு இங்கு வந்துவிட்டன—இந்தச் சேதி இப்போது தான் நமக்குத் தந்தி மூலம் கிடைத்தது."

இந்த விஷயத்தை எமன் மிகச் சாதாரணமாக தேசியம்பிள்ளையிடம் கூறினான். தேசியம்பிள்ளை, நூறு நயா பைசாக்களை அள்ளி நீட்டினார். அதை யாரோ வாங்கிக் கொண்டார்கள். காசுகள் மறைந்துவிட்டன. ஒரு ரோஜா மாலை தேசியம்பிள்ளையின் கையில் தரப்பட்டது.

அவர் அதை மரியாதையாக வாங்கிக் கொண்டு எமனைத் தொடர்ந்து நடக்கலானார். மல்லிகை, முல்லை, முதலிய மலர்களின் மென்மையான மணம் "கம கம" வென்று வீசிக்கொண்டிருந்தது. ஊதுவத்திகளின் வாசம் உள்ளத்திற்குப் பூரிப்பை அளித்தது. தகதக வென ஜொலிக்கும் தங்கம் பூசிய படிக்கட்டுக்கள், இடையிடையே வைரக் கற்கள் பொருத்தப்பட்டு ஒளி மழை பொழிந்து கொண்டிருந்தன. திரும்பிய பக்கமெல்லாம் மூவர்ணப் பட்டுத் திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. நவரத்தினங்கள் இழைத்த பெரிய கதவொன்றின் அருகே எமன் போல் நின்று, "நந்தா! நந்தா!!" என்று அழைத்தான்.

கன்னங் கருத்த மேனியும் கட்டுடலும் கவர்ச்சியானதோற்றமுங்கொண்ட ஒரு வாலிபன் வந்து வணங்கி நின்றான்.

எமன், அவனது கைகளைக் குலுக்கித் தழுவிக் கொண்டான்.

"என்ன நந்தா! சுகந்தானே?" என்று எமன் குசலம் விசாரித்து விட்டு, தேசியம்பிள்ளையை அறிமுகப் படுத்தி வைத்தான்.

நந்தன், தேசியம்பிள்ளையை வரவேற்றுக் கைகுலுக்கக் கை நீட்டினான். தேசியம்பிள்ளை கையை இழுத்துக்கொண்டு முகத்திலே வெறுப்பை நிறைத்துக்கொண்டு நின்றார்.

"நெருப்பிலே குளித்து வந்தவனய்யா நான்! சாதாரண தண்ணீரிலே குளித்தால் சாதியெனும் அழுக்குப் போகாதென்று தீயிலே கருகி வந்த வாலிபனய்யா! சும்மாத் தொடும் என்னை!" என்று கூச்சலிட்டவாறு நந்தன், தேசியம் பிள்ளையைத் தழுவிக் கொண்டான். தேசியம் பிள்ளைக்கு அதிர்ச்சியினால் மயக்கம் வந்து விட்டது.

பிறகு, நந்தன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். "ஆபத்திற்குப் பாபமில்லை!" என்று கூறியவாறு தேசியம் பிள்ளை அதைக் குடித்து மயக்கம் தெளிந்தார்.

நந்தனிடம் அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டு தேசியம் பிள்ளையும் எமனும் காந்தியைப் பார்க்க சொர்க்கச் சிறைக்குள் நுழைந்தார்கள்.

வரிசை வரிசையாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. இனிமையான இசை எங்கும் பரவியிருந்தது. நடன மாதர்கள் ஆங்காங்கு ஆடிக்கொண்டிருந்தனர். கண்ணைப் பறிக்கும் விதத்தில் எழில் ததும்பும் சிங்கார மண்டபமொன்று! அதன் நடுவே விலைமதிக்க முடியாத நவரத்தின சிம்மாசனம்! அந்த ஆசனத்தில் ஒரு மகாராஜா அமர்ந்திருந்தார். மகாராஜாவின் உடைதானா? அல்லது வானத்தை நட்சத்திரங்களோடு எடுத்துப் போர்த்திக் கொண்டிருக்கிறாரா என ஐயப்படும் வகையில் மணிகள் மின்னிக் கொண்டிருந்தன. தேசியம்பிள்ளை உற்றுப் பார்த்தார். அரை நிர்வாணப் பரதேசி—அகிம்சா மூர்த்தி—ஏழைப் பங்காளர்—பாட்டாளியின் தோழர் — எளிய வாழ்வின் எடுத்துக்காட்டு — என்றெல்லாம் போற்றப்பட்ட போர்பந்தர் மகான்தான் பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டியவாறு பூரிப்போடு அமர்ந்திருக்கிறார் என்பதனை அறிந்து கொண்டார்.

"அய்யனே! இது என்ன கோலம்?"

"இந்த அலங்கோலம்தான் நான் பூலோகத்தில் புரிந்த தீமைகளுக்குத் தரப்பட்ட தண்டனையப்பா!" என்றார் காந்தி!

தேசியம்பிள்ளை, கையிலுள்ள மாலையை காந்தியின் கழுத்திலே அணிவிக்க முன்வந்தார்.

"நிறுத்து; நிறுத்து! போடாதே மாலையை!" என்று கைநீட்டித் தடுத்தார்.

"ஏன் அய்யனே தடுக்கிறீர்கள்?" என்று பதறிப் போய்க் கேட்டார் தேசியம் பிள்ளை.

"காங்கிரசைக் கலைத்துவிட்டு வந்து எனக்கு மாலை போடுங்கள் என்று அப்போதே சொன்னேன். அதைச் செய்யாமல் மாலை மட்டும் போட்டு என்னை மயக்கப் பார்க்கிறாயா?"

—காந்தி ஆத்திரப்பட்டார்.

"மாலையா இது? மகாபாதகர்களே! மாலையா இது? நன்றாகப் பாருங்கள்! எலும்புத் துகள்களைப் பொறுக்கி அரும்பு மாலையென எனக்குப் போட வந்துவிட்டீர்களா? நிரபராதிகளின் ரத்தத்திலே தோய்ந்த வெள்ளை மலர்களை எடுத்து ரோஜா மாலையெனத் தொடுத்து என் கழுத்திலே தொங்கவிடப் புறப்பட்டீர்களா? இதோ எனக்கு ராஜ உடை போட்டு ராஜபோகங்களோடு வாழவைத்து என் மன நிம்மதியைக் குலைத்து என்னை இந்தச் சிறைச்சாலையில் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறானே; எமன்—இந்த எமனைவிடக் கொடியவர்கள் நீங்கள்! என் முன்னே நில்லாதீர்கள்! போய்விடுங்கள்!"

"அப்படியென்ன அபச்சாரம் செய்தோம் தங்களுக்கு?"—தேசியம்பிள்ளை பீதியுடன் கேட்டார்.

"இன்னுமா அபச்சாரம் செய்ய வேண்டும்? எமன் என்னை அரசனாக ஆக்கினான்—நீங்கள் என்னை ஆண்டவனாக ஆக்கிவிட்டீர்கள்!"

"அது உங்களுக்குப் பெருமை தானே?"

"எனக்குப் பெருமைதான்! ஆனால் அது உங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு வழி!"

"என்ன மகாத்மா சொல்லுகிறீர்கள்?"

"கோயில்களிலே இருக்கிற கடவுட் சிலைகள்மீது அபார பக்தியுள்ளவனைப்போல நடிப்பான் பூசாரி! பூசாரிக்கு அந்தச் சிலைகளின்மீது கடவுட்பற்று இல்லாவிட்டாலும் கலைப்பற்றுகூடக் கிடையாது! சிலைமீது பூசாரிக்கு அதிக மரியாதையென்று மக்கள் எண்ணிக்கொள்வார்கள். அதனால் பூசாரிக்கும் மதிப்பு தருவார்கள். சுட்ட செங்கல்லை ஈரத் துணியால் மூடிச் சுடச்சுட 'பொங்கல் நைவேத்தியம்' செய்வதுபோல் பாசாங்கு செய்வான் அந்தப் படுபாவி! "ஆகா, என்னே பூசாரியின் பக்தி!" என்று வாய் பிளந்து நிற்பார்கள் பக்தர்கள். இந்த வழியில் பூசாரி, பக்தர்களை ஏமாற்றிக்கொண்டிருப்பான். பக்தர்கள் ஏமாறுகிறவரையில் பூசாரிக்குக் கொண்டாட்டந்தானே! பாவம், கடவுளுக்கு செங்கல் படையல்தான் மிச்சம்! ஊரிலே உத்தமன் என்று பூசாரிக்குப் பட்டம்! இப்படித்தானப்பா பூலோகத்திலே சில கட்சிகள் இருக்கின்றன. கட்சித் தலைவர்கள் கடவுளைப்போல செங்கல்லை மட்டுமே காணுகிறார்கள்....பூசாரிகள் பூரிப்போடு வாழ்கிறார்கள்.... அந்த ரகத்தில் முதல்தரமான கட்சி காங்கிரஸ்! முதல்தரமான பூசாரி நீ! முதல்தரமான ஏமாளிக் கடவுள் நான்!"

காந்தி கண் கலங்கினார்! தேசியம்பிள்ளை பதில் சொல்ல முடியாமல் திணறினார். எமன் எருமைமாட்டைத் தட்டிக் கொடுத்தான்.

(தொடரும்)

24 மணி நேரத்தில் எட்டு மணி நேரம் கடமை—எட்டு மணி நேரம் தூக்கம்! மீதமுள்ள நேரத்தை வீணாக்காமல், வருங்கால முன்னேற்றத்திற்காக, வாழ்க்கையின் நிம்மதிக்கரகச் செலவிடுவது எப்படி?

அதற்கு நல்வழி கூறுகிறது...

24 மணி நேரமும் -

- வாழ்வது எப்படி?

★

முத்தாரம்

இதழ் 25-ல்!

ஏப்ரல் முதல் வாரம் கிடைக்கும்!

பொன் இருக்குது பூமிக்குள்ளே; கண் இருக்குதா கனவான்களே?

'வளம் வடக்கே கொட்டிக் கிடக்கிறது! ஆகவேதான் வானத்தைக் கறுப்பாக்கும் ஆலைகள் தோன்றுகின்றன, அங்கே! தென்னகத்தில் என்ன இருக்கிறது? மண்ணைக் கொண்டு, வெறுங் கல்லைக் கொண்டு, செங்கல்லைக் கொண்டு என்ன செய்ய முடியும்?—என்று கூறி சுய திருப்தி அடைந்துகொள்கிறார்கள் சென்னை அரசினர்.

'களம் கண்டு, மாற்றாருக்குத் தன் மண்வளத்தின் பயனை விளைந்த மனவளத்தைக் காட்டிய எங்கள் தென்னவனின் மண்ணிலா வளம் இல்லை என்றீர்? எண்ணிக்கொள்ளும்! கோலார் எனும் பகுதி எண்பது மைல் சுற்றளவிற்குத் தங்கத்தைத் தன் மடியிலே புதைத்து வைத்திருக்கிறது. சேலம், பல்லாரி மாவட்டங்களின் அடியில் இரும்புக் கனி கனிந்து நின்று குனிந்து எடுப்போர் இல்லையோ என ஏங்கி நிற்கிறது. திருவாங்கூரில் தாடகை மலையிலும் திருச்சியில் வையம்பட்டி கிராமத்திலும் இன்றைய உலகத்தைஆட்டுவிக்கின்ற பெருமைமிக்க பொருளாம் யுரேனியம் பூமிக்கடியில் பதுங்கிக் கிடக்கிறது,

'தஞ்சைத் தரணியின் கீழிருக்கும் நஞ்சையிலே கண்ணாடிப் பாளங்கள் கணக்கற்றுத் தூங்குகின்றனவாம். காவிரி குதித்தோடும் திருச்சிராப்பள்ளி பகுதியில் பாஸ்பேட் எனும் பொருள் மண்ணுக்குள் கலந்து கண்ணுக்குத் தெரியாமல் உறங்குகின்றதாம்!....'

—என்று நாம் அடுக்கிறோம்; காலக்குறியிட்டால் கங்குல் பகலெனப் பாராது புள்ளிவிவரங்கள் கொண்டு வந்து தரும் நிபுணர்கள் நம்மிடம் இல்லை; இருந்தும், கூறுகிறோம் ஆர்வ மிகுதியால், அன்னை நாடு வாழ வேண்டும் என்ற ஆசையால்!

இந்த ஆர்வத்தையும், ஆசையையும் காலில் மிதித்துத் துவைத்து இன்பம் காணுகிற காட்டுத்தனமான பேராசை இந்நாட்டு அதிகாரத் தொந்தி விழுந்த பெரியவர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது!

ஆசை ஆவேசமாக மாறுகிறபோது, மக்களின் இதயங்கள் குமுறுகிறபோது ஓடோடி வந்து ஒன்றிரண்டைக் காட்டி ஆவேசத்தை அடக்கவும் குமுறலைக் குறைக்கவும் வழி தேடுகின்றனர்.

'ஏனிந்த நாட்டில் ஒன்றுமில்லை? ஏணிப்படியாக நம்மை ஆக்கிவிட்டு வடநாடு ஏற்றம் கொள்ளுகிறதே—இதைப் பார்த்துக்கொண்டு மந்திரிமார்கள் என்ன செய்கிறார்கள்?'

—என்ற கருத்து பொதுமக்களின் மனதில் குருத்துவிடும் முன்பே, முல்லைக் கொடியின் முளையைக் கொய்வதுபோல் கொய்துவிட முனைகிறார்கள், குந்தாக்களையும், நெய்வேலிகளையும் திருப்பித் திருப்பிக் காட்டி!

கேட்கும்போதெல்லாம் தென்னகத்து மக்களின் இதயத்திற்கு இன்பத்தேன் வார்த்துக்கொண்டிருப்பது, சேலத்து இரும்பு! இரும்பு ஆலை அமைக்கப்பட்டுவிட்டால், இந்த நாட்டிலும் சொந்த வீட்டிலும் கரும்பும், நெல்லும் குவியும்; சுகனத்துப் போகப் பொருட்கள் 'திராவிட தீபகற்பத்தில்' வந்து குவியும்; என்று எண்ணி எண்ணி இதயம் பூரித்தார்கள்.

தங்களின் சோம்பலால் அந்த ஆசையைக்கூட நிராசையாக்கிவிட்டு அழியாத மாசைத் தேடிக்கொண்டார்கள், இந்த மாநிலத்தைக் கட்டியாள்வோர்!

"எந்தெந்த நாட்டுக் கம்பனி பனிகளோ வந்தனவாம் அந்த இரும்புக் கனியைப் பார்வையிட்டனவாம். இந்த நாட்டு ஆராய்ச்சி நிலயங்களிலேயே சோதித்துப் பார்த்தார்கள், சேலத்து இரும்பை! 'இது தக்கதல்ல: தரம் உயர்ந்ததல்ல' என்று 'அசகாய சூரர்களான' இவர்களே முடிவுசெய்து விட்டனராம். பிறகு, அந்த வெளி நாட்டுக் கம்பெனிகளுக்கு இச்சேதி தரப்படவில்லை; சேலத்து இரும்பு காலத்தின் புழக்கடையில் தூக்கியெறியப்பட்டது.

அடுத்த சோகக் கதை, பிரசித்திபெற்ற நெய்வேலிக் கதை! வெறும் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருக்கும், அந்த 'நிலக்கரி' எடுக்கிற திட்டம், நம் திறமை வாய்ந்த அரசினரால் வெகு சீக்கிரத்தில் நல்ல முடிவெய்தப் போகிறதாம். இந்தப் பழுப்பு நிலக்கரியை எடுத்தபாடில்லை; எடுத்த பின்னர் அதை எப்படிப் பயன்படுத்துவது என்ற திட்டத்தில் தெளிவு பட்டபாடுமில்லை!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே பழுப்பு நிலக்கரியின் தன்மையினை மாற்றி 'கறுப்புத் தங்கமாம்' நல்ல நிலக்கரி, தருகின்ற பயன் அனைத்தையும் தருகின்றபடி அறிவியல் முறை அங்கு பயன்படுத்தப்படுகிறதாம்.

அந்த முறையில் தங்கள் திட்டத்தினை மாற்றிக்கொள்ள இந்த மாநில அரசினர் வக்கும் வகையும் அற்றிருக்கிறார்கள்; வடவர் கண்ணசைப்பும் இதற்கில்லை!

தொழிற் துறையில் இந்த மாநில அரசு நடத்திய தோல்வி நாடகங்கள் இதைப்போலே பலப்பல! அந்த நாடகங்களிலே கண்ட அனுபவங்களையும், அழியாத வடுக்களையும் அவர்கள் கித்தாப்புக் கொட்டி மறைக்க முயல்கிறார்கள்.

என்னதான் அவர்கள் வெளியில் பேசினாலும், உள்ளத்தினுள்ளே உறுத்திக் கொண்டுதானிருக்கும், நாம் அடிக்கடி உரத்த குரலில் பேசுகின்ற தென்னகம் வளமிருந்தும் 'தழைக்கவில்லை' எனும் உண்மை! நல்ல வளமிருந்தும் தெற்கு தழைக்கவில்லை என்கிற உண்மைக்கு உரமிடும் செய்தியொன்று வெளிவந்திருக்கிறது.

"திருச்சிராப்பள்ளிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்று மேற்குஜெர்மன் நிபுணர்களின் குழு கூறியிருப்பது நமக்கு மகிழ்ச்சிதரும் சேதியாகும். நாட்டின் தேவைப் பொருளான எண்ணெய் கிடைக்குமாயின் நம் நாட்டின் வருவாயை அதிகப்படுத்தும்''

இந்தப் பத்திரிக்கைச் செய்தி பஞ்சடைந்து போன கண்களிலேயும், பாழ்பட்டுப்போன நெஞ்சிலேயும் உரத்தினை ஊட்டி, நம்மவரை நிமிரச் செய்கிறது! திருச்சிராப்பள்ளியில் — எண்ணெய்! தென்னகத்து மண்ணில் எண்ணெய் வடிவில் பொன்! திசை மாறி, திக்கு மாறிப்போன வாழ்வினரில் சிலருக்கு வேலை வாய்ப்பை தந்து இரைப்பையை நிரப்ப வழிவகுக்கின்ற தொழில்! மணலையும், முதுகு பெருத்த ஒட்டகத்தையுமே நம்பியிருந்த அராபியர்கள், இன்று மற்ற நாட்டினர்களுடன் சரிசமமாக பொருளாதாரத் தொடர்பில் அடித்துப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த அதே எண்ணெய், இன்று தென்னகத்தில்!

—இப்படியெல்லாம் கனவு விரிந்து கொண்டே போகிறது. இந்த இன்பக்கனவை மேலும் இனிக்க வைக்கும் சேதி இந்நாட்டு விஞ்ஞானிகள் அதைக் கண்டு பிடிக்கவில்லை; சந்திரகிரகணத்தின்போது சாப்பிடாது 'விரதம்' இருக்கிற நம் விஞ் 'ஞானிகள்' என்பவரால் கண்டு பிடிக்கவில்லை!—என்பதாகும்.

சொன்னால் செய்யும் திறன் வாய்ந்த ஜெர்மனியர்கள் கூறியிருக்கிறார்கள், தென்னகத்தில்—திருச்சிப் பகுதியில் எண்ணெய் கிடைக்குமென்று!

மேற்கு ஜெர்மானியர்களின் கூற்றிலே முழு உண்மையிருக்குமென்ற காரணத்தாலும், அந்தப் பகுதி எண்ணெய்க் கிணறுகளைத் தாங்கும் வளம்படைத்ததுதான் என்று முன்னமேயே கேள்விப்பட்டிருப்பதாலும் தென்னக மக்கள் இந்த சேதியை, சிந்தனை அணுவைச்சிலிர்க்கவைக்கும்சேதியென எண்ணி மகிழ்கிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியில் பொருளுண்டு; உழுதறுத்துக் கொட்டி ஊரானுக்கு அளந்து கொடுத்துவிட்டு, தன் உடலையும் உயிரையும் வளர்க்க உழக்கு அரிசிகூட இல்லாது ஏங்குகின்ற உழவன் 'நிலம் உனக்குச் சொந்தமாகப் போகிறது. அதற்கு அச்சாரமாக நீ வாங்கிய கடனை இனி யாரும் கேட்கமாட்டார்கள்' என்னும் சேதியைக் கேட்டால் எந்தவித மகிழ்ச்சி கொள்வானோ, அந்த வித மகிழ்ச்சியேதான் இதுவும்!

தொடர்ந்து ஏற்பட்ட ஏமாற்றங்களால் இதய அறைகள் கிழிந்து கிடக்கிற தென்னாட்டவரின் உடலில் ஒரு தெம்பு பிறக்க வழி துலங்கியிருக்கிறது.

இந்த நல்ல வாய்ப்பையும் பழைய கதைகளைப் போலே பாலைவனத்துக் கானல்நீராய் மாற்றி ஏமாற்றத்தை நோக்கி நம்மை ஓட வைத்து விடுவார்களோ, நம்முடைய ஆளவந்தார்கள் எனக் கேட்க விரும்புகிறது, நாடு!

★ ★ ★

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயற் குழு கூட்டம்

★

"22—3—59 ஞாயிறு பிற்பகல் 3 மணியளவில் தரங்கம்பாடி—கோட்டையில், தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், ஏப்ரல் திங்கள், 18, 19 (சனி, ஞாயிறு) நாட்களில் காரைக்காலில் முத்தமிழ் மாநாடு நடத்துவது பற்றியும், ஏப்ரல் முதல் வாரம் தொடங்கி மாவட்டத்தில் கழக உறுப்பினர்கள் புதுப்பிக்க—சேர்க்க ஏற்பாடுகள் செய்வது பற்றியும், முடிவெடுக்க வேண்டியுள்ளது. அருள்கூர்ந்து மாவட்டக் கழக உறுப்பினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கருதி வருகை தந்து சிறப்பிக்க வேண்டும்"

—என்று தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

சினிமா தினசரியாக
தென்றல் திரை
ஆசிரியர் கே. ஆர். பாலன்
ஏப்ரல் 14உ
வருகிறது
நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை
விவரங்களுக்கு தென்றல் திரை சென்னை 14.

கணிதப் புலவனை அறியாதவரே! குறுகிய நோக்கம் யாருக்கு?

குறுகிய நோக்கினர்

கோணல் மதியினர்

துரோகச் சிந்தையினர்

துண்டாடும் பித்தர்கள்

—இவ்வாறு நாம் அர்ச்சிக்கப் படுகிறோம், புதுடில்லிதேவதை களின் சென்னைப் பூசாரிகளால்! 'பிரிவினை வேண்டும்' என்கிற நம்முடைய அமுதகீதம், ஆலகால நஞ்சாகத் தெரிகிறது, அவர்களுக்கு! 'கூட்டங்களில் துண்டு வாங்குவதே, இவர்கள் நாட்டைத் துண்டுபோடும் நாச முயற்சிக்கு நாட்டு மக்களை இழுக்கும் வேலையாகும்'—என உள்ளூர நினைத்து, உதட்டில் கடுஞ்சொற்களை உதிர்க்கிறார்கள், நம்மை நோக்கி!

"'உலகெலாம்...' —என்றுதானப்பா தமிழ் இலக்கியங்களே துவங்குகின்றன; நீ ஏன் இந்தக் குறுகிய புத்தி கொண்டு அலைகிறாய்?"—என்று தமக்குத் தெரிந்த 'அரைகுறை'த் தமிழறிவைக் காட்டி தாயக விடுதலை உணர்வை மிரட்ட 'எண்ணு'கிறார்கள், 'சென்னை ராஜ்ய'த் தமிழமைச்சர்கள்!

இந்த 'எடுபிடி அரசாங்க முதல்வர்கள்தான்' இப்படியென்றால் மூலவர்களான டில்லித் தலைவர்களோ பஞ்சாபிலும், பம்பாயிலும், அஸ்ஸாமிலும், ஒரிஸ்ஸாவிலும்— "பிரிவினை வாதம் கூடாது; தகாது; குறுகிய நோக்கம் தீது; பரந்த நோக்கம்தான் வேண்டும்; பாரதம் பிளப்பது நல்லதோ? பிரிவினை வாதிகள் பெரும் தீய சக்திகள்; அவர்களைத் தீர்த்துக் கட்டுவதைத் தவிர திவ்ய வேலை நமக்கு வேறு எது?"—என்று திராவிடத்தின் எழுச்சிக் குரலை கவனத்தில் வைத்துக்கொண்டே பேசுகிறார்கள். பரந்த நோக்கம் என்றால் பாரதப் புத்திரர் நாம் என்ற நினைவுதான் என்னும் தப்புக் கணக்கையே அவர்கள் இன்னும் நிலை நாட்ட நினைக்கிறார்கள்!

பல மொழியினரை—பல மதத்தினரை—பல இனவழி வந்தவரை — வேளாவேளையில் கிடைத்த வெற்றியின் பயனாகக் கிடைத்த நிலப் பரப்பில் அடைத்து, மாகாணம் என்ற பெயர் சூட்டி, தங்களுக்கு ஏற்ற வகையில் நிர்வாக வசதி செய்து கொண்டு ஆண்டனர் வெள்ளையர், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக! பற்பல இயற்கைக் காரணங்களால் மாறுபட்டுக் கிடப்பவர்களைப் பிணைத்து வைத்திருப்பதாலேயே பிரிவினைக் பண்பாடு மறையவில்லை; மாற்றம் அடையவில்லை; மங்கியும் போகவில்லை; மாறாக வளர்ந்து கொண்டே இருக்கிறது! என்ற இந்த அடிப்படைக் கருத்தை உணர்ந்தும், உணராததுபோல் நடிக்கின்றனர், வடவரும், அவருக்குக் காவடிதூக்கும் தென்னவர்களும்! மாகாணத்திற்குப் பதிலாக 'ராஜ்யங்கள்' ஏற்பட்டதாலோ, 'பிரதேஷ்'கள் ஏற்பட்டதாலோ விடுதலை விரும்பும் மக்களின் தாகம் தணிக்கப்படமாட்டாது. அவர்களுக்கு நாள்தோறும், நிமிடந்தோறும் பிரிந்து வாழ்வதற்கான ஆதாரங்கள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. அந்த ஆதாரங்களை அமுக்கிவிடவும், 'பாரதம், பரந்த நோக்கம்' ஆகியவற்றின் பறையொலியைப் பெரியதாக எழுப்பவும் முயற்சித்து வருகிறார்கள், தேசியத்தார்கள்!

இருந்தும், அந்த ஆதாரங்களும், அப்பட்ட உண்மைகளும் வெளிவருகின்றன; 'பாரதம் ஒரே தேசம்; ஒரே குடும்பம்!"—என்கிற முகத்திரையைக் கிழித்தெறிகின்றன. அப்படிப்பட்ட அப்பட்ட உண்மை நல்கும் நிகழ்ச்சியொன்று பம்பாயில் நடந்திருக்கிறது!

வயிறு வீங்கிச் செத்த வடநாட்டான்; வழுக்கி விழுந்து உயிர்விட்ட வடநாட்டவன்——முதலியோர்களின் 'வாயில் நுழையாப்' பெயர்கள் நம் மூளை நுழைக்கப்படுகின்றன, 'பரந்த நோக்குவேண்டும்' என்கிற காரணத்தைக் காட்டி!

ஆனால், பம்பாயில் பண்டித நேரு பிரசன்னமாயிருந்த காங்கிரஸ் அரசியல் தலைவர்களின் மாநாட்டில் 'பாரதத்தின் புராதன பகுதியான தக்காணத்தைப்' பற்றி அந்த வடநாட்டுப் பாரத சகோதரர்கள் என்ன நினைத்திருக்கிறார்கள் என்பதையும், தென்னகத்தின் அறிவாளிகளைப் பற்றி எவ்வளவு தூரம் அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்த்திற்று.

பண்டிதர் போட்டாராம், ஒரு கேள்வி!

அதுவும் கல்வியறிவும் முன்னேற்ற எண்ணமும் கொண்டதாகக் கருதப்படும் பம்பாய் நகரில் நடந்த மாநாட்டில்!

"இந்த நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜனைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?"

பாரதப்புத்திரர்களின் கூட்டத்தில் பேச்சு மூச்சில்லை. கரம் சந்துகளையும் பிரேம்பொந்துகளையும் கேட்டே பழக்கப்பட்டுப் போன, அவர்களுக்கு இந்தப் பெயரைத் தாங்கிய தென்னாட்டு அறிவாளியைப் பற்றிச் சொல்லத் தெரியவில்லை! நேருவின் கேள்விக்குப் பதிலில்லை. ஒருவர் எழுந்து நின்றார்!

"ராமானுஜனைப் பற்றி நான் அறிவேன்; அவர் ஒரு கவிஞர்!"—என்றாராம்!

தென்னகத்தில் பிறந்து, இங்கிலாந்தின் கணிதப் பேராசிரியர்களால் புகழப்பட்ட அந்த கணக்கு மேதை ராமானுஜனை ஒரு கண நேரத்தில், அந்தப் பரந்த நோக்குள்ள, 'பாரத பிரஜை' கவிஞராக்கிவிட்டார்!

இந்த லட்சணத்தில்தான் நம்மைப் பற்றி நம்மை ஆளுகின்ற நாட்டினர் அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அடிமை நாட்டில் பிறந்த அறிஞனைப் பற்றி அவர்கள் கவலைப்பட நியாயமில்லை; தங்களுடைய ஆளும் பூமியில் பிறந்த பைத்தியக்காரனே அந்த அறிவாளியைவிடச் சிறந்தவன் என அவர்கள் நினைப்பதிலும் தவறில்லை!

தவறெல்லாம் அவர்களின் 'பரந்த நோக்கம், பாரத தேசம்' என்கிற மாயையினுள் அமிழ்ந்து கிடக்கிற நம்முடையதாகும்!

நாம் அந்தத் தவறைக் களைந்து, தாயக விடுதலைக் கனலை உள்ளத்தில் ஏற்றுக் கொள்கிறபோதுதான் துவக்கத்தில் குறிப்பிட்டதுபோல் வசைமொழி பொழிகிறார்கள்.

வசைமொழி பொழிந்தாலும், வாழவிடமாட்டேன் என்று வலக்கரம் தாங்கும் துப்பாக்கியைக் காட்டி அதட்டினாலும் நாம் முன்னேறுகிற பக்குவத்தினைப் பெறவேண்டும்.

"குறுகிய நோக்கம் எங்களுடையதல்ல! வெள்ளையரின் அடிமை வம்ச மன்னர்களாய் டில்லியிலிருந்து ஆளும் நவீன 'குத்புதீன்களே'! குறுகிய நோக்கம் உங்களுடையது! மக்கள் தொகையையும், அதனால் மக்களவையையும் ஆட்டிப் படைத்து, தக்காணத்திற்கு மனதறிந்த தீங்கும், உத்திரப் பிரதேசங்களுக்கு வரம்பு மீறிய உபசரிப்பும் செய்து வருகின்ற டில்லி ஆதிபத்யமே! குறுகிய நோக்கம் உன் குழந்தை; நீ கள்ளக் காதலனுடன் கூடிப் பெற்ற குழந்தை! இல்லையென்றால் ஒரு கண்ணிலே வெண்ணெயும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் தடவுவதைப் போன்று எங்கள் நாட்டை வஞ்சிக்கிற வஞ்சக எண்ணம் ஏன்?"

—என்று தட்டிக் கேட்டுப் பதில் தருகின்ற துணிவு வர வேண்டும். விடுதலைப் பாதைக்கு வழி வகுக்கும் இந்தத் துணிவு இன்று எல்லோருக்கும் ஏற்படாவிட்டாலும், அத்தகைய துணிவின் ஆரம்ப சுதியான வடக்கின் வஞ்சகப் போக்கினைக் கண்டிக்கும் பண்பு பரவலாகத் திராவிடமெங்கும் வளர்ந்து வருகிறது: பரந்த நோக்கம் என்பது விந்தியத்திற்கு வடக்கே வாழ்பவர்களுக்குச் சிறிதும் கிடையாது என்றும் உணர்வும் வளர்ந்து வருகிறது!

★ ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவ் (ரெட்டி) ஆந்திர சட்டசபையில் பேசும்போது "கடந்த பத்து ஆண்டுகளாக நமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்த வண்ணம், இருக்கிறது, மத்திய அரசு! போதா எனுமிடத்தில் ஆரம்பிப்பதாக இருந்த காகிதத் தொழிற்சாலை கூட வெளிநாட்டு நாணயச் செலாவணி சீர்குலையும் என ஏதோ காரணத்தைக் காட்டி நிறுத்தி விட்டது" என்று தம் அதிருப்தியை அழாக்குறையாக வெளியிட்டார்!

★ திரு. இமாம் என்கிற தென்னகத்துப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், "கடந்த பத்தாண்டுகால ஆட்சியில் நீங் தென்னாட்டில் ஒரு அங்குல நீளமாவது ரயில்பாதை போட்டிருக்கிறீர்களா?" — என்று பாராளுமன்றத்தில் பேசும் போது, உளம் நொந்து ஆவேசத்துடன் தாக்கியிருக்கிறார், மத்திய அரசை!

★ மேற்கூறிய இரண்டு செய்திகளையும் வெளியிட்ட 'டெக்கான் ஹெரால்ட்' எனும் தென்னாட்டு ஆங்கிலப் பத்திரிகை "இவ்விதம் ஒரு பெரிய பகுதியினுடைய (தென்னாட்டினுடைய) தேவைகளை அலட்சியப்படுத்துதல்தான் குறுகிய நோக்கம்"—என்று தலையங்கத்தில் உணர்ச்சி முதிர்ந்த நிலையில் எழுதிக் காட்டுகிறது.

ஆந்திர அமைச்சரின் அதிருப்தியும், இமாமின் ஆவேசமும், டெக்கான் ஹெரால்டின் உணர்ச்சியும் 'தென்னக விடுதலை வேட்கை'யாக என்று மாறுமோ, அன்றுதான் இவர்கள் கூறுகின்ற குறைகள் நீங்கும்; குறுகிய நோக்கம் அழியும்; நம்மை பாரதம் எனும் தளையால் அடிமைப்படுத்தி வைத்திருக்கிற டில்லிக்காரர்கள் அலட்சியத்தைக் கைவிட்டு நம் அறிஞர்களின் புகழையும் பெயரையும் அறிந்து கொள்ள வழி ஏற்படும்!

—அடியார்

குன்றத்தூர் தி. மு. க. வளர்ச்சி நிதி நாடகம்!

29—3—'59 ஞாயிறு இரவு 10 மணிக்கு

குன்றத்தூரில்

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில்

கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள்

எழுதி, நடிக்கும்

'உதயசூரியன்'

[எம். என். கிருஷ்ணன், மனோரமா, மற்றும் எம். என். கே.யின்

முரசு நாடக மன்றத்தினர் நடிக்கிறார்கள்.]

பற்றாக்குறை நிதிக் கொள்கை

சி. ஜம்பு

திட்டம் வழங்கிய திட்டக்குழு இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்திற்கு (1956—61) சர்க்கார் துறையில் ரூ. 4800 கோடி செலவிடுவதென்றும், தேவைப்படும் தொகைக்கு ரூ 1200 கோடி பற்றாக்குறை பட்ஜெட் மூலமாக —அதாவது நோட்டடிப்பதின் வழியாக ஈடுகட்டிக் கொள்ளுவதென்றும் முடிவு செய்தது. திட்டம் வெளியானவுடனேயே, பொருளியல் அறிஞர்கள், பொருளாதார முன்னேற்றத்தில் பின் தங்கிய இந்தியாவில் திட்டச் செலவில் 4-ல் 1 பங்கு பற்றாக்குறை நிதி மூலமாகச் சரிகட்டிக் கொள்ளுவது பயங்கரமான பண வீக்கத்தையும், அதன் வழி விலைவாசிகள் விஷம்போல் ஏறும் கொடிய நிலைமையையும் உருவாக்கும் எனத் தக்க ஆதாரங்களோடு விளக்கினர். ஆளவந்த காங்கிரஸ் அமைச்சர்களோ இது குறித்து சிரத்தை காட்டி ஆராயாமல் மமதையோடு வாளாயிருந்தனர். இன்றைய தினம், இப்பற்றாக்குறை நிதிக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதால், பொதுவாக ஏற்பட்டிருக்கும் பண வீக்கம்—விலைவாசி ஏற்றம் சிரமத்திற்குள்ளாக்கி வாழ்க்கையைப் பெருஞ் சுமையாக மாற்றியிருப்பதோடு, ஐந்தாண்டுத் திட்டங்களில் பெருமளவு வஞ்சிக்கப்பட்டிருக்கும் நிலையில் தென்னகம் மேலும் வேதனையைச் சுமக்க வேண்டியிருக்கின்றது.

பற்றாக்குறை நிதிக் கொள்கை, யுத்த காலத்தில் பொருளாதார நெருக்கடியை சமாளித்துக் கொள்ள வகுக்கப்பட்ட வழியாக முதலில் இருந்தது. பின்னர். பொருளாதார நிலையில் தளர்ச்சி ஏற்பட்ட நேரத்தில் வேலை வாய்ப்புக்கள் நிறைய அமைய வேண்டி சர்க்கார் செலவுத் தொகையைக் கூட்டிக்கொள்ளப் பற்றாக்குறை நிதிக் கொள்கை கடைபிடிக்கப்பட்டது. இன்றைய தினம், பின் தங்கிய நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் விரைவில் காண வேண்டி இக் கொள்கை பின்பற்றப்படுகின்றது. இதை யொட்டிதான், இந்திய சர்க்கார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 420 கோடி ரூபாய்—திட்டச் செலவில் 21 சதவிகிதம் பற்றாக்குறை நிதிக் கொள்கை மூலமாக, வெறும் நோட்டடிப்பதின் வழியாகச் செலவு செய்துள்ளனர்.

பற்றாக்குறை நிதிக்கொள்கை சரியான முறையில் கடைப்பிடிக்கப்படாவிட்டால் நிச்சயம் பண வீக்கத்தை—விலைவாசிகள் ஏற்றத்தை உண்டு பண்ணும் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இன்றைய தினம் இந்தியாவில் காணப்படும் பண வீக்கத்திற்குப் பற்றாக்குறை நிதிக் கொள்கை பெருமளவுக்குக் காரணம் என்பதை பொருளியல் அறிஞர்கள் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளுகின்றனர்.

பண வீக்கத்தின் காரணமாக ரூபாயின் மதிப்பு — வாங்கும் சக்தி குறைகின்றது. ரூபாய்க்கு 5 சாதாரண படி அரிசி வாங்கிய நிலை மாறி, 2 சாதாரண படி அரிசி கிடைக்கும் நிலை இருக்கிறதென்றால், ரூபாயின் மதிப்பு வாங்கும் பொருள் அளவில் எந்த அளவு கீழ் நோக்கிச் சரிந்திருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தச் சரிவு நிலைமை பயங்கரமான பொருளாதாரக் குழப்பத்தைத் நாள் தவறாமல் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

பொதுவாக, பணத்தின்மதிப்பு எக்காலத்திலும் ஒரே அளவில் இருக்க இயலாது என்பதை நாம் புரிந்து கொண்டாலும், திடீர் திடீரென்று பணத்தின் மதிப்பு மாறி வருவதினால் நிகழும் பொருளாதாரச் சீர்கேட்டை அறிந்து கொண்டு பணமதிப்பைச் சீராக பார்த்துக் கொள்ள வேண்டியது சர்க்காரின் தலையாயப் பொறுப்பாகும்.

பணப் புழக்கத்தில், ஒரு ரூபாய் என்பது அதற்கான ஒரு தனி மதிப்பைப் பண்டங்களை வாங்கும் வகையில் பெற்றிருக்கிறது. இதைப் போலவேதான் 1 வீசை என்பது 40 பலத்தை நிரந்தரமாக உள்ளடக்கி இருப்பதாக, 1 அடி என்பது 12 அங்குலத்தை உள்ளடக்கி இருப்பதாக நாம் கருதி யிருக்கின்றோம், ஒரு நாள், திடீரென்று 35 பலம் ஒரு வீசை எனவும், 10 அங்குலம் 1 அடி எனவும் நிலைமை மாறினால் வாணிகத்தில் என்ன குழப்பத்தை—நிலை மாற்றத்தைக் காணலாம்? ஆனால், இன்றையத் தினம் எந்தக் காரியத்திற்கும் பயனாகும் ரூபாயின் மதிப்பு தினம் தினம் மாறிக்கொண்டேயிருப்பதால் எவ்வளவோ சிரமங்களை சமுதாயத்திலே பல்வேறு நிலையிலே வாழ்பவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பிட்ட அளவு மாதச் சம்பளம் பெறுகின்ற சர்க்கார் ஊழியர்கள், தொழிலாளர்கள் இன்ன பிற ரகத்தினர் பெருஞ்சிரமங்களை அனுபவிக்க — உற்பத்தியாளர்கள், பெருமளவுக்கு வாணிகஞ் செய்வோர் கொள்ளை இலாபத்தை அடையவுமான நிலைமை தினம் தினம் பெருகி வருகிறது.

ஒரு சர்க்கார் மூன்று முக்கிய வழிகளில் திட்டங்களுக்கான செலவுத்தொகைகளைப் பெறலாம். புதிய வரிகள் போடுவதின் மூலம்; கடன்கள் பெறுவதின் மூலம்; பற்றாக்குறை நிதிக் கொள்கையை கடைப்பிடிப்பதின் மூலம்.

இந்திய சர்க்காரே மேற் கண்ட மூன்று வழிகளையும் கடைசி அளவு வரை பயன்படுத்துகின்றது. இந்த வரம்பற்ற நிலைமை ஆகாது—கூடாது என பல்வேறு கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்து விளக்கி, கண்டித்திருக்கின்றனர். என்றாலும் நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் வெற்று நோட்டடிப்பதை விட மாட்டேன் என விராப்புப் பேசுகின்றார்.

நம்மைப் பொறுத்த அளவில், பெருமளவு பற்றாக்குறை பட்ஜெட் டெல்லியில் சமர்ப்பிக்கப்படுவது தென்னாட்டை மேலும் சங்கடத்துக்குள்ளாக்கும் என்பதுதான்.

ரூபாயினுடைய வாங்குகின்ற சக்தி குறைகின்ற அதே நேரத்தில் புதிய தொழில் வளர்ச்சி மூலம், நல்ல திட்டங்கள் வழி, முறையான ஊதியம் பெறுகின்ற நிலைமை காரணமாக ஒரு தனி மனிதன் தன்னுடைய வாங்கும் சக்தியைப் பெருக்கிக் கொண்டு, விலைவாசி ஏற்றத்தை சமாளித்துக் கொள்ளுகின்றான். ஆனால் ஐந்தாண்டு திட்டங்கள்மூலம் வடநாட்டிலே புதிய அணைக் கட்டுகள், பல்வேறு மின்சார உற்பத்தி நிலையங்கள், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், இரயில் பாதைகள் இன்னபிற பிரம்மாண்டமான அளவிலே பெருகி வருகின்றன. எனவே, அங்கு வசிக்கின்ற மக்களுக்குப் புதிய வருமானம் கிடைக்கின்ற நிலைமை; இருக்கின்ற வருமானத்தை வளர்த்திக் கொள்ளக் கூடிய நிலைமை தினம் தினம் பெருகி வருகின்றது.

எனவே, வாங்கும் சக்தி வடநாட்டு மக்களுக்குப் பெருகி, விலைவாசி ஏற்றத்தினால் நிகழும் சிரமங்களை சமாளிப்பதோடன்றி பொருளாதாரத் துறையிலும் முன்னேறுகின்றனர்.

பற்றாக்குறை நிதிக் கொள்கை கடைப்பிடிப்பதின்மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் யாவும் வடநாட்டுக்கு; விளையக்கூடிய தீமைகள் யாவும் தென்னாட்டுக்கு!

இந்தப் படுமோசமான நிலை கட்டுப்படுத்த இயலாத அளவுக்கு அன்றாடம் மறைமுகமாக வளர்ந்து வருகின்றது.

இவ்விதம் மறைமுக வளர்கின்ற பேராபத்தைப் புரிந்து, கொள்ளாதவர்களாக இன்றைய மாநில அரசும், அதை ஆட்டிப் படைக்கும் கட்சியும், மற்றும் தமிழகத்து அகில இந்தியாக் களும் இருந்து வருகின்றன. நாம் சொல்வதை மறுப்பதும், நாம் மறுப்பதை ஆதரிப்பதுமே புதியதோர் தத்துவம் என்கிற முறையிலே தன் பாதையை வழி வகுத்துச் செல்வது அவற்றின் அழிவு காலத்தையே குறிப்பதாகும். மறைமுகமாக வளர்ந்து வருகின்ற, தென்னாட்டிற்கே தீமையளைத்தும் என்கிற நிலை கவிழ்ந்து, திராவிடமும் தன் வழிவகுத்து முன்னேறும் நாள் எந்நாளோ?

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தர்ம சாலைகள் — சத்திரங்கள்— இருந்தன. பெரிய நகரங்களில் இலவச மருத்துவ விடுதிகளும் இருந்தன.

இந்தியாவெங்கும் சுற்றித் திரிந்து பல நகரங்களைக் கண்ட பிறகு ஃபாஹியான் சிலோன் போய்ச் சேர்ந்தான். அங்கே இரு ஆண்டுகள் தங்கியபின் கடல் மார்க்கமாகத் தாய்நாட்டுக்குத் திரும்பிப் போனான். ஆனால் அவனோடு வந்த மற்றொரு யாத்ரிகன் டோ—சிங் (Tao-ching), இந்தியாவில் வாழ்ந்த பௌத்தத் துறவிகளின் கட்டுப்பாடு நிரம்பிய ஒழுங்கான வாழ்க்கையைப் பார்த்து, அவர்களிடம் பெரு மதிப்புக் கொண்டு இந்தியாவிலேயே தங்கி விட்டான்.

விக்கிரமாதித்யன் இருபத்தி மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனுக்குப்பின் குமார குப்தன் நாற்பது ஆண்டுகள் ஆண்டபின், ஸ்கந்த குப்தன் கி. பி. 455-ல் அரியணை ஏறினான்.

மாதவி, இன்னொரு விஷயத்தையும் நான் உனக்குச் சொல்ல வேண்டும். அஜந்தாவின் அற்புத ஓவியங்கள் குப்தர்களின் காலத்தில் ஓவியக் கலை இருந்த சிறப்பினை நன்கு உணர்த்தும். நிறம் மங்கினாலும், காலத்தால் கலையழகு குலையாமல் விளங்கும் அந்த ஓவியங்கள் இன்றும் பார்ப்போரைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன.

சில ஆண்டுகளில் ஹூணர்களின் படையெடுப்பால் குப்த சாம்ராஜ்யம் அழிந்து போய் விட்டது. ஹூணர்களை விரட்டுவதில் ஸ்கந்த குப்தன் வெற்றியடைந்தாலும் முடிவில் அவர்களுடைய ஆக்ரமிப்பைக் குப்தர்களால் தடுத்து நிறுத்துவதற்கு முடியவில்லை. வெற்றியடைந்த ஹூணர்கள் பௌத்தர்களைச் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாக்கினார்கள். ஹூணர்களின் தலைவனான தோரமான் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். அவனே தீயவன்; ஆனால் அவனுக்குப்பின் வந்த அவனுடைய மைந்தனான மிகிரகுலா கொடுமையே உருவானவன்; மனித இதயமற்ற மிருகம். மாதவி. அவனுடைய பொழுது போக்கு என்ன தெரியுமா? மலைச் சிகரங்களிலிருந்து கீழே யானைகளை உருட்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பானாம்! இந்தச் செய்தியை 'ராஜதரங்கினி' என்ற காஷ்மீர நாட்டு வரலாற்று நூல் எடுத்துச் சொல்கிறது. மிகிரகுலாவின் கொடுமைகள் எல்லை கடந்து போகவே, குப்த வம்சத்தினுதித்த பாலதித்யனும், மத்திய இந்தியாவை ஆண்ட யசோதர்மன் என்ற மன்னனும் ஒன்றாகச் சேர்ந்து மிகிரகுலாவைத் தோற்கடித்துக் கைது செய்தனர்.

ஆனால் பாலதித்யன் பெருந்தன்மையோடு மிகிரகுலாவை விடுதலை செய்து, இந்தியாவை விட்டே வெளியேறி ஓடும்படி எச்சரித்து அனுப்பினான். வஞ்சக மிகிரகுலாவோ காஷ்மீர நாட்டில் தஞ்சம் புகுந்து பாலதித்யனை முதுகுப்புறமாகத் தாக்க ஏற்பாடு செய்தான்!

ஹூணர்களும் இந்தியாவில் பலமிழந்தார்கள். வட இந்தியாவில் பிற்காலத்தில் வாழ்ந்த சில ராஜபுத்ர வம்சங்கள் ஹூணர்களின் சந்ததியே!

பாலதித்யன் கி. பி. 530-ல் இறந்து போனான். இவனை புத்த மதம் மிகவும் கவர்ந்தது. பௌத்தத் துறவி ஒருவரையே இவன் தன்னுடைய குருவாகக் கொண்டிருந்தான். இருநூறு ஆண்டுகள் வரை இந்திய வரலாறு இருண்டு காணப்படுகிறது. குப்தர்களின் வீழ்ச்சிக்குப் பின் புலிகேசி ஸ்தாபித்த சாளுக்கிய சாம்ராஜ்யம் சிறப்புப் பெற்றது. சாளுக்கியர்கள் பாரசீகம் முதலிய வெளி நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தனர்.

குப்தர்களுக்குப் பின் இந்தியாவில் பேரரசனாகக் கோலோச்சியவன் ஹர்ஷ வர்த்தனன். அவனைப் பற்றி என் அடுத்த கடிதத்தில் பேசுவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

"இதுதான் செருப்பு!"

"இல்லை; இல்லை; நீ பொய் சொல்கிறாய்—இதற்குப் பெயர் பாதரட்சையாகும்!"

"ஹா! என்ன இது அராஜகம்? ஏன் இந்த கலாட்டா? நீங்கள் சொன்னது எதுவுமேயில்லை; இதன் திருநாமம் ஜோடு!"

"தோழர்காள்! உடன் போரை நிறுத்துமின்! அமைதியைக் காத்திடுமின்! நீவிர் குறிப்பன எவையும் யான் ஏற்கமுடியாதனவாகும்! இனியேனும் இதனைக் காலணி என்று விளிப்பீராக!"

களுக்கு ரூ. 275 மட்டும் சர்க்கார் உதவிற்றே; ஒரு வீட்டுக்கு ரூபாய் ஆறே, ஏழோ போதுமானதா? இதற்கு கனம் "உடைந்த சைக்கிள்" பதில் அளிக்க வேண்டும்!"—என்ற கேள்வி எழும்பும்!

அங்கத்தினர்கள் எதுவும் புரியாது விழிக்கிற நேரத்தில், அமைச்சர் மாணிக்கவேலர் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கத் தொடங்குவார். [அதாவது பழைய காமன்வீல் கட்சிக்காரர்.]

★

'முத்தமிழ் கலா சாகர வித்வ

★ 'சுப்புணி' சொன்ன விளக்கம்! ★

—இப்படி நடுத் தெருவிலே பலர் குனிந்து நின்று 'அந்தப் பொருளு'க்கு எந்தப் பெயர் வைப்பது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால், பார்ப்பவர்கள் என்ன செய்வார்கள்?

பைத்தியக்காரர்களே! 'வாஸ் கோடகாமாவின் வாரிசு'களே! இதுதான் இப்போது தேவையான ஆராய்ச்சியா? 'அதை' எப்படியாவது அழைத்துவிட்டுப் போங்களேன்—என்று தன் வழியே நடப்பார்கள்.

'காலுக்குக் கீழே' இருக்கக் கூடிய பொருளுக்குப் பல பெயர் சூட்டலாம்; பெயர் தேடி சண்டையிட்டுக் கொண்டிருப்போரையும் பைத்தியக்காரர்கள் என்றும் சொல்லலாம்!

ஆனால், காலுக்குக் கீழே ஒரு நாட்டின் கௌரவத்தையே நசுக்கும் வகையில் பேசியிருக்கிறார், கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்!

காலணிக்கு இருக்கலாம் பல பெயர்! ஆனால் ஒரு நாட்டுக்கும் இருக்கலாம் இரு பெயர் என்கிற அவரது கூற்றைப் பொறித்து வைக்கப் பொன்னேட்டையே தேடினார்களாம், காங்கிரஸ்காரர்கள்!

சென்னை சட்டமன்றத்திலே நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதிலளித்த கனம் அமைச்சர், 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டாதது ஏன் என்ற வினாவுக்கும் ஒரு வேடிக்கையான பதிலைச் சொல்லியிருக்கிறார்:

"ஒருவருக்கு இரண்டு பெயர் இருப்பது தவறா? அதுபோல் 'மதராஸ், தமிழ்நாடு' என்று இரண்டு பெயர்கள் வழங்கி விட்டுப் போகட்டுமே! அதற்கு ஏன் மாற்றங்கள் எல்லாம் செய்ய வேண்டும்?..."

—இந்தப் பதிலுக்கு அவருடைய 'நிதி' மூளையிலிருந்து அருமையான விளக்கமும் உதிர்ந்திருக்கிறது:

"என் வீட்டிலே என்னை வேறு செல்லப் பெயரில் அழைக்கிறார்கள்! வெளியில் 'சுப்பிரமணியம்' என்று கூப்பிடுகிறார்கள்! அதைப்போல மதராஸ் என்றும், தமிழ்நாடு என்றும் அழைத்தால் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது...?"

—கோவைச் சீமானின் இந்தக் கோணல் விளக்கத்தைக் கேட்டபோது 'கோவைக் காயை'ச் சுவைத்த விளைவுதான் ஏற்பட்டது அநேகருக்கு!

ஆனாலும் அடுத்த கணமே

ஒரு சிறு கற்பனை...ஒருவருக்குப் பல பெயர் வழங்கலாம் என்ற இந்தப் புதிய தத்துவத்தைப் பயன்படுத்தி ஒரே ஒரு நாள் மட்டும் சட்ட மன்றம் நடைபெற்றால்...? சட்டமன்றத்திலே அமர்ந்திருப்பவர்களுக்குப் பெற்றவர்கள் இட்ட பெயர் தனியே இருக்க நாட்டு மக்கள் அளித்த 'பட்டப் பெயர்கள்' சட்ட மன்றக் குறிப்பேட்டிலே இடம் பெற்றால்....? எப்படி இருக்கும்...?

★

சபாநாயகர் உள்ளே நுழைவார். பேச எழுவார்.

"அட்ட திக்குப் பாலகர்களே!

[இப்படித்தான் தமிழக ஆட்சி அவையிலே இருக்கிற எட்டு அமைச்சர்களுக்கு மக்கள் மன்றம் பெயர் சூட்டியிருக்கிறது!]

"காளை மாட்டின் சின்னங்களே!

[கிராமங்களில் எல்லாம் காங்கிரஸ் கட்சி என்பதற்குப் பதிலாக காளை மாட்டுக் கட்சி என்றால்தான் புரியுமாம்!]

"இப்போது கேள்வி நேரம்"—என்று சொல்லிவிட்டு உட்காருவார்!

உடனே ஒரு உறுப்பினரின் கேள்வி வாசிக்கப்படும்:

"நட்சத்திரக் குறியிட்ட கேள்வி: கனம் 'ரெடிமேடு அமைச்சர்' அவர்கள் பதில் சொல்வாராக! துறைமுகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு..."

கேள்வி முடிவதற்கு முன் "ரெடிமேடு அமைச்சர் என்றால் புரியவில்லையே!" என்ற புதிய கேள்வி எழும்பும்.

ஆனால், இந்த வினாக்குறி அடுத்த கணமே அடங்கிவிடும், கனம் பக்தவத்சலனாரின் கம்பீரமான குரலைக் கேட்டு!

★

"மழையினால் நாசமான 40 வீடு



பூஷணம்' மராமத்து இலாக்கா சம்மந்தப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் தரலாம்!

[மன்னிக்க வேண்டும்; இது சமீபத்தில்சூட்டப்பட்ட பெயர். 'ஆகாஷ்வாணி'யை மாற்ற வேண்டுகிறவர்கள் ஏன் 'சத்தியவாணி' என்ற பெயரை மாற்றவில்லை என்று 'தமிழ்' பேசிய பிறகு அமைச்சர் கக்கன் அவர்கள் இப்படி மாறி விட்டார்!]

★

'இன்றைய தினம் சட்ட மன்றத்திற்கு 'போனால் போகிறது' என்று வந்திருந்த அமைச்சர்களின் பட்டியல்' என்பதன்கீழ் கீழ்க்கண்ட பெயர்கள் காணப்படலாம்:

காமு — [காமராஜரை அவரது தாயார் அழைக்கும் அன்புப் பெயர்]

சுப்புணி — [அமைச்சர் சுப்ரமணியத்தின் செல்லப் பெயர்]

பத்து — [போலீஸ் அமைச்சருக்கு சுருக்கமும்—காரணமுங் கொண்ட பெயர்]

வெங்கிட்டு — [அமைச்சர் வெங்கட்ராமனின் வீட்டுப் பெயர்]

ராமு — [மின்சார அமைச்சரின் பாட்டி கூப்பிடும் பெயர்]

கக்கு — [மராமத்து அமைச்சரின் மாமனார் கூப்பிடும் பெயர்]

★

இந்த ஒருநாள் நிகழ்ச்சிக்குப் பின் 'கனம் அனுமார்' தன்னுடைய பட்ஜெட் விவாத பதிலுரையில் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டாமென்பதற்குக் குறிப்பிட்ட மேற்கண்ட கருத்தை திரும்பப்பெறுவார் என்று எதிர்பார்க்கலாம்!

[அனுமார் என்ற இந்தப்பெயரை மக்கள் சூட்டியதில்லை; அவரது பழைய குருநாதர் ஆச்சாரியாரே சட்ட மன்றத்தில் 'சுப்பிரமணியம் என் அனுமார் போல' என்று குறிப்பிட்டிருப்பதை மறக்கமுடியுமா?]

★

அன்று மாலை மவுண்ட் ரோடு சட்டசபைக் கட்டிடத்திலுள்ள குழந்தைகள் சினிமாக் கொட்டகைக்கு அமைச்சர் சுப்ரமணியம் 'விஜயம்' செய்த நேரத்தில், சில சிறுவர்களிடம் அவர்களுடைய பெயர்களை விசாரித்தாராம். அப்போது கிடைத்த செல்லப் பெயர்களில் சில:

"இரட்டை வால், வேட்டை நாய், அவரைக்காய் வற்றல், மைசூர் போண்டா, தபால் ஆபீஸ், மாங்கொட்டை, குண்டுசட்டி. இத்யாதி...இத்யாதி..."

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு